தமிழ்நாடு சட்டப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2041 – பங்குனி 25

2010 ஏப்ரல் 8, வியாழக்கிழமை

சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், புதிய சட்டப் பேரவை–தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்."

பயனளிக்காத சொற்களை விடுத்து மனதில் பதிந்து பயனளிக்கக் கூடிய சொற்களையே கூற வேண்டும்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 31, மாண்புமிகு **உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன்,** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

31—

விதைப் பண்ணை

***65309—திரு. டி. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தளி தொகுதி, தேன்கனிக்கோட்டையில் விதைப் பண்ணை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தளி தொகுதி, தேன்கனிக்கோட்டையில் ஒரு விதைப் பண்ணை அமைக்கும் அவசியம் எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன், இருக்கையில் இல்லை, அவருக்குப் பதிலாக மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. இராமசாமி.

திரு. தி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேன்கனிக்கோட்டை, காய்கறிகள், கிழங்குகள், பருத்தி போன்ற விவசாயம் சிறப்பாக நடந்து வருகின்ற பகுதி. அதிலும் குறிப்பாக, கிருஷ்ணகிரி மாவட்டம் நீர்வளம் மிக்க பகுதி. அந்தப் பகுதியில் விதைப் பண்ணை ஒன்றைத் தொடங்கி, விதை ஆராய்ச்சிகள் நடத்தி, அந்த மாவட்ட மண் வளத்திற்குத் தகுந்தாற்போன்று, கிருஷ்ணகிரி, தருமபுரி பகுதி மக்களுக்குப் பயன்படுகின்ற முறையில் ஒரு விதைப் பண்ணையை அரசு அமைத்துக் கொடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு விதைப் பண்ணைகள், விவசாயிகளுக்குத் தரமான ஆதார விதைகளை வழங்கிடும் நோக்கத்தோடும், மாநிலத்தின் விதைப் பெருக்கத் திட்டத்திற்கு ஏற்பவும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் இந்திய வேளாண் ஆராய்ச்சி மன்றம் ஆகியவற்றிலிருந்தும் நெல், சிறு தானியங்கள், பயறு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துக்கள் ஆகிய பயிர்களின் வல்லுநர் விதைகள் பெறப்பட்டு, விதை சான்றளிப்பு சட்ட விதிமுறைகளின்படி இந்தப் பண்ணைகளில் ஆதார விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. தேன்கனிக்கோட்டை வட்டத்தில் தளி மற்றும் கெலமங்கலம் ஆகிய இரண்டு வட்டாரங்கள் உள்ளன. தேன்கனிக்கோட்டை வட்டத்தில் சாகுபடி செய்யப்படும் பயிர்களின் பரப்பு விவரம், நெல் 2,750 எக்டர். சிறு தானியங்கள் 24 ஆயிரம் எக்டர். பயறு வகைகள்

2010 ஏப்ரல் 8]

9,850 எக்டர். எண்ணெய் வித்துக்கள் 7,500 எக்டர். மொத்தம் 44 ஆயிரத்து 100 எக்டர். தேவையான ஆதார விதைகள் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அகசிப்பள்ளியில் உள்ள அரசு எண்ணெய் வித்துப் பண்ணையிலிருந்தும் (Oil Seeds Farm), சேலம், ஈரோடு மாவட்ட அரசு விதைப் பண்ணைகளிலிருந்தும் உற்பத்தி செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு விதைப் பெருக்கத்திற்கு வழங்கப்பட்டு வருகின்றன. இது தவிர, விவசாய நிலங்களிலும் ஆதார விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்படுவதால் இங்கே விதை ஆராய்ச்சிப் பண்ணை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. இராமசாமி.

திரு. தி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு விதைகள் என்பது, வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற விதைகளாக இருப்பதால், அதை எதிர்த்து ஒரு பக்கம் நாடு தழுவிய முறையில் போராட்டம் நடந்து வருகின்றது. எங்கள் ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியைப் பொறுத்தவரை, அங்கே பருத்தி ஆராய்ச்சிப் பண்ணை செயல்பட்டு வருகிறது. இன்றைக்குத் தமிழகத்தில் பருத்தி விவசாயம் குறைந்து வருகிறது. அதற்கு விதை ஒரு முக்கியமான பங்கு வகிக்கிறது.

எனவே, இருக்கிற பருத்தி ஆராய்ச்சி விதைப் பண்ணைகளை மேம்படுத்தி, தமிழகத்தில் பருத்தி விவசாயத்தை, மகசூலை அதிகப்படுத்துகின்ற முறையில், நல்ல மகசூல் கொடுக்கின்ற விதைகளை உற்பத்தி செய்து, பருத்தி விவசாயத்தில் ஈடுபட்டிருக்கின்ற விவசாயிகளை ஊக்கப்படுத்துவதற்கு, தாராளமாக பருத்தி விதைகளை மானியத்தில் கொடுத்து, பூச்சி தாக்காமல் அவற்றைப் பாதுகாத்து, கட்டுப்படியான விலையைக் கொடுத்து, இங்கே பருத்தி மகசூலை அதிகப்படுத்துவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9—35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப்போல, பருத்தி உற்பத்தி ஒவ்வொரு ஆண்டும்

11-98—3a

கொஞ்சம் குறைந்து கொண்டு வருவது உண்மைதான். இருந்தாலும், அரசு பருத்தி உற்பத்தியில் அதிக கவனம் எடுத்து, அதிக அளவில் உற்பத்தி செய்ய வேண்டுமென்ற நடவடிக்கையை இப்போது எடுத்து வருகின்றோம். ஸ்ரீவில்லிபுத்தூரிலே இருக்கக்கூடிய அந்த ஆராய்ச்சிப் பண்ணை சிறப்பாகச் செயல்படுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. போ. கோபாலன்.

திரு. போ. கோபாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலையில் தொலைக்காட்சியைப் பார்க்கும்பொழுது, ஆஸ்திரேலியாவில் மட்டும் வளரக் கூடிய துலிப் மலர்கள் உதகை அரசினர் பூங்காவிலும் அழகாக மலர்ந்திருப்பதைக் காட்டினார்கள். நீலகிரி மாவட்டத்தில் பல்லாயிரக்கணக்கானோர் கொய் மலர் சாகுபடியில் ஈடுபட்டிருக்கிறார்கள். அந்த துலிப் மலர்கள் ஊட்டியில் அழகாக வளரும் என்ற காரணத்தினால், அதற்காக ஒரு பண்ணையைத் தனியாக அமைத்துத் தருமாறு வேண்டுகிறேன். அரசு அதற்கு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரியில் கொய் மலர் அதிக அளவில் தயாரிக்க இப்போது முன்வந்திருக்கின்றார்கள். அதற்காக பசுமைக் குடில் அமைத்துத் தரப்படுகிறது. மலர் ஏற்றுமதிக்கான வாய்ப்பும் உருவாக்கித் தரப்பட்டிருக்கிறது. ஆகவே, நீலகிரி மாவட்டத்தில் இப்போது, மலர்கள் உற்பத்தி செய்வதற்கு அரசாங்கம் எல்லா வகையிலும் உறுதுணையாக இருந்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. ஐயப்பன்.

திரு. கோ. ஐயப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூரிலுள்ள விவசாயிகள் அனைவருக்கும் பயன்படக்கூடிய கரும்பு ஆராய்ச்சிப் பண்ணை புகழ் பெற்று விளங்கக்கூடிய வகையிலே இருந்து கொண்டிருக்கின்றது. அதேபோன்று எனது தொகுதிக்குட்பட்ட நானமேடு ஊராட்சிப் பகுதியிலே

2010 ஏப்ரல் 8]

சிறப்புவாய்ந்த வெங்காயம், அங்குள்ள விவசாயிகளால் பயிரிடப்பட்டு, உலக அளவில் இன்று ஏற்றுமதி செய்யக்கூடிய அளவிற்கு, வியாபாரிகள் அங்கே வந்து, வெங்காயத்தை வாங்கிச் செல்கின்றார்கள். அங்கே வெங்காய விதைப் பண்ணை மற்றும் காய்கறி விதைப் பண்ணை அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெங்காயத்திற்கு என்று தனியாக விதைப் பண்ணை அமைத்துத் தருவதற்கு வாய்ப்பில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிலிப்பைன்ஸ் நாட்டில் நடைபெற்ற மாநாட்டில், உலகில் 85,000 நெல் ரகங்கள் உள்ளன என்றும், அவற்றில் இந்தியா 16,000 புதிய ரக விதைகளைக் கண்டுபிடித்து சாதனை படைத்துள்ளது எனப் பாராட்டப்பட்டுள்ளது. ஆகவே, கோயம்புத்தூரில் வேளாண்மைப் பல்கலைக்கழகம்மூலம் கண்டுபிடிக்கப்பட்ட நெல் விதை ரகங்கள் எத்தனை; திருவண்ணாமலை மாவட்டத்தில் எத்தனை ரகங்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிலிப்பைன்ஸ் நாட்டில் நடைபெற்ற மாநாட்டிலே, குறிப்பாக இந்தியாவில், தமிழகத்தில் புதிய நெல் ரகங்கள் மற்றும் வீரிய விதைகள் கண்டுபிடிக்கப்பட்டு, இன்றைக்கு அதிக அளவு உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன என்று பாராட்டியிருக்கின்றார்கள். ஆனால், திருவண்ணாமலையில் எத்தனை ரகங்கள் உள்ளன என்ற அந்த விவரம் என்னிடத்திலே இல்லை. தனிக் கேள்வி போட்டால் தரப்படும்.

[2010 ஏப்ரல் 8

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

முற்பகல் 9—40

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டத்தில் தற்பொழுது முருங்கைக்காய் சாகுபடியில், உற்பத்தி அதிகமாக ஆகிக்கொண்டிருக்கிறது. இந்த முருங்கைக்காய்கள் வெளி மாநிலங்களுக்கும், வெளி நாடுகளுக்கும்கூட ஏற்றுமதி ஆகின்றன. உற்பத்தி அதிகமாக இருக்கக்கூடிய நேரங்களில், முருங்கைக்காய், தக்காளி, வெங்காயம் போன்றவற்றிற்கு நியாயமான விலை கிடைக்கவில்லை என்று விவசாயிகள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, வேளாண்மைத் துறையினுடைய அதிகாரிகள் மூலமாக அங்கு முருங்கைக்காய் சாகுபடி செய்யக்கூடிய விவசாயிகளோடு பேசி ஒரு நியாயமான விலையை நிர்ணயிப்பதற்கு, இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய காய்கறிகளுக்கு நியாயமான விலை கிடைக்க வேண்டும், இடைத்தரகர்கள் குறைந்த விலையிலே வாங்குவதைத் தடுத்திட வேண்டும் என்பதற்காகத்தான் உழவர் சந்தை தொடங்கப்பட்டு, விலை நிர்ணயிக்கப்பட்டு, விவசாயிகளும், நுகர்வோரும் பயனடைந்து வருகின்றார்கள். முருங்கைக்காய்கள் இப்பொழுது நல்ல விலைக்குத்தான் விற்றுக்கொண்டிருக்கின்றன. தக்காளியைப் பொறுத்தவரையில், சில நேரங்களில் நல்ல விலை கிடைக்கும், சில நேரங்களில் விலை குறைந்து விடும். அவ்வாறு இல்லாமல், முருங்கைக்காயின் விலை ஏறுமுகமாகவே இருந்து வருகிறது, நல்ல விலை கிடைத்துக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 32, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப. மதியரசன், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.